# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (09.08.2022 முதல் 13.08.2022 )

**அறிக்கை எண் 063/2022** **தேதி.08.082022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 16°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (05.08.2022 முதல் 07.08.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05/08 | 06/08 | 07/08 | தேதி | நாள்-1 09/08 | நாள்-2 10/08 | நாள்-3 11/08 | நாள்-4 12/08 | நாள்-5 13/08 |
| 5.6 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 2 | 0 | 0 |
| 26 | 28 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 33 | 33 |
| 22 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| 8 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 4 | 4 |
| 81 | 88 | 88 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 65 | 65 |
| 83 | 81 | 75 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| 23 | 27 | 25 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 14 | 14 | 12 | 12 |
| 230 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (09.08.2022 முதல் 13.08.2022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். 10.08.2022 மற்றும் 11.08.2022 ஆகிய நாட்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம்

65 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 09-08-2022 | 1 | 6 | 14 | 2 | 6 | 13 | 3 | 4 | 2 | 0 | 16 | 0 | 2 |
| 10-08-2022 | 3 | 8 | 18 | 3 | 8 | 16 | 4 | 6 | 4 | 0 | 20 | 0 | 3 |
| 11-08-2022 | 0 | 3 | 7 | 0 | 2 | 6 | 1 | 1 | 0 | 0 | 8 | 0 | 0 |
| 12-08-2022 | 0 | 0 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 |
| 13-08-2022 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப்படுகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.<br>மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உயரமான பயிர்களுக்கும் கால்நடைக் குடில்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>மழையினால் கிடைக்கும் அதிகப்படியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிப்பதன் மூலம் தேவைப்படும்போது மீண்டும் உபயோகிக்கலாம். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, மக்காச்சோள விதைப்பைத் போதிய வடிகால் வசதியுடன் தொடர வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி போதிய வடிகால் வசதியுடன் ஆடிப்பட்டம் மக்காச்சோளத்ததை விதைக்க இது உகந்த காலமாகும். |
| கரும்பு | வளர்பருவம் | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழை மற்றும் கரும்புக்கு ஊன்று கொடுக்கவும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும்.<br>கடந்த வாரங்களில பொழிந்த மழையால் கரிசல் மண்ணில் சாகுபடி செய்யப்பட்ட பின்பட்ட கரும்பில் இரும்புச்சத்து குறைபாடு |

| | | |
|---|---|---|
| | | காணப்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய 15 நாட்களுக்கு ஒருமுறை 1 சதம் அன்னபேதிஉப்பையும் மற்றும் 1 சத யூரியாவையும் கலந்து தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| தக்காளி | நடவு | தக்காளி நடவு செய்யும் பொழுது மழை எதிர் பார்க்கபடுவதால் பார்களில் நடவு செய்வது உசிதமாகும். |
| தென்னை | | தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிட்டு காற்றின் வேகத்தை குறைக்க வேண்டும்.<br>தொடர்மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை மற்றும் கோழிகூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

- மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உயரமான பயிர்களுக்கும் கால்நடைக் குடில்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**